# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN APRIL – 2009

## TML 1.11 – LITERARY APPRECIATION AND PRESCRIBED TEXTS

'அ' பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் 'ஆ', 'இ' பகுதி ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – அ

01. இலக்கியம் என்றால் என்ன என்று வரையறை செய்வதோடு இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான ஊடாட்டத்தினையும் விளக்குக.

02. (அ) மேல்வரும் மூன்று பகுதிகளுள் எவையேனும் இரண்டு பகுதிகளில் அடங்கியுள்ள செய்யுள்களுக்கு இக்கால நடையில் தெளிவாகப் பொருள் எழுதுக.

(i)

ஆங்கு,
ஆயர் முதுமகள் ஆடிய சாயலள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள் மேவிக்
குரவை முடிவிலோர் ஊர் அரவம் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்
அவள்தான்,
சொல்லாடாள் சொல்லாடா நின்றாள் அந்நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடும் தான்.

(ii)

வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நற்கலை இல் மதி அன்ன நகை இழந்த முகத்தானை
கல்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
வில் கையினின்று இடைவீழ விம்முற்று நின்றொழித்தான்

"நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் ; அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் ; தவவேடம் தலைநின்றான்
துன்பம் ஒரு முடிவில்லை ; திசை நோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?" என்றான்

(iii)

நடுக்கம் உற்றுமெய்ச் சுரத்தொடும் குளிர்தர நலிந்து
மிடுக்க கன்றிடப் பயத்தொடும் அரிவையை விளித்துத்
திடுக்க முற்றது துகில்கொடு பொதிமனந் தெளியா
திடுக்க ணியாதென வறிகில னென்றன ரிறசூல்

தலைவர் கூறிய மொழிசெவி புகவுட றயங்கி
நிலைகு லைந்தெழுந் தயர்வொடு நெட்டுயிர்ப் பெறிந்து
பலம லர்த்தொடை செறிந்தபஞ் சணைமிசைப்படுத்திச்
சலவை கொண்டுறப் போர்த்தரு கிருந்தனர் தையல்.

(ஆ) மேல்வரும் கவிதையில் நீர் காணும் நயத்தினைச் சுருக்கமாக விவரிக்குக.

கல்லடுக்கி மேலே கனத்த உருளைகளைச்
செல்லவிட்டுச் செல்லவிட்டுச் செப்பனிட்ட
நல்லநெடு
வீதி.
அதனில் வெகுண்டோடும் வண்டிகளில்
மோதி நடப்போர் முடிவெய்தும்
தீதகல
இட்டநடை பாதை
இவை இரண்டின் ஓரங்கள் முட்டுகின்ற கோட்டின் முடுக்கினிலே
பட்ட விழிக் கின்ப விருந்தாய் இருளில் ஒளிமின்னல்
முன்பல்லைக் காட்டி முறுவலித்த
பின்போய்
ஒளியாததுபோல் ஒரு புல் இடுகைத்
தளிர் நீட்டி நின்றாள்
தலையில்
மிளிர்கின்ற
பூவொன்றைக் கூடப்
புதிதாய்ப் புனைந்திருந்தாள்
காவிக்குயில் வாயில் காட்டிடையே
பாவொன்று
கேட்டதனை ஒக்கும்
கிடுகிடுத்துக் கொண்டிருக்கும்
பாட்டையிடை அப் பசுமையே
நாட்டம்
பிறவாசிச் செல்கின்ற பித்தர் உளத்தோடு
உறவாடித் தந்தாள் உவகை
இறவாது
வேரிற் கிடந்து வெடுக்கென்று மாரிவரப்
பூரிக்கக் கண்டால் புளகம் மெய்
ஊராதோ!
ஆழப் புதைந்த அறம்போல்
முளைத்தெழுந்தாள்
வாழ அவளுக்கென் வாழ்த்து!

## பகுதி – ஆ

03. பரதன், குகன் ஆகிய இரு பாத்திரங்களும் இராமனிடம் கொண்ட பேரன்பினை குகப் படலம் மூலமாக கம்பன் வெளிப்படுத்தும் திறத்தினை விபரிக்குக.

04. உமறுப் புலவரின் படைப்பாளுமையின் திறனை நபிப்பட்டம் பெற்ற படலத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக.

05. சிலப்பதிகார காவிய ஓட்டத்தில் 'துன்பமாலை' பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

## பகுதி – இ

06. மகாகவி பாரதி, தமிழ்க்கவிதை வரலாற்றில் பெருந்திருப்புமுனையாக அமையுமாற்றினைத் தெளிவுறுத்துக.

07. "புதுமைப் பித்தன் சிறுகதைகள் சமூக அவலங்களின் பிரதிபலிப்பாகும்" – ஆராய்க.

08. கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் படைப்பாற்றலை மதிப்பிடுக.

***